செ. வெ. எண் - 440 நாள் - 13-07-2016.

கன்னியாகுமரி மாவட்ட திட்டக்குழுவின் 15வது கூட்டம் வரும் 15.07.2016 வெள்ளி கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாக நாஞ்சில் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கான பொருள் குறிப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இக்கூட்டத்தில் தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## பொருள் குறிப்பு

1. மேற்கு கடற்கரை சாலை மிகவும் புழுதடைந்து வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி சாலையை உடனடியாக சரிசெய்ய கேட்டல்.
2. நாகர்கோவில் நகராட்சியில் பாதாள சாக்கடை வேலை முடிவுற்ற மாநில நெடுஞ்சாலைகளை உடனடியாக செப்பனிடுதல் சம்மந்தமாக.
3. கோட்டார் இரயில்வே நிலைய சாலையில் பேருந்துகள் நிறுத்துமிடம் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.எனவே பேருந்து நிறுத்தத்தை சற்று தள்ளி மாற்றம் செய்தல் சம்மந்தமாக.
4. தக்கலை வருவாய் கிராமத்தில் இருந்து விலவூர் வருவாய் கிராமத்தை தனியாக அமைத்தல்.
5. தக்கலை காவல் நிலையம் மற்றும் திருவட்டார் காவல்நிலையம் எல்கை பகுதிகளை பிரித்து சுவாமியார்மடத்தில் புதிய புறக் காவல்நிலையம் அமைத்தல்.
6. கன்னியாகுமரி மாட்டத்தில் கடலோர பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான இடங்களில் - கேரளாவில் கடலில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது போல் இம்மாவட்டத்திலும் தூண்டில் வளைவு அமைத்தல்.
7. விளாத்துறையில் அமைந்துள்ள கடலோர கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் குழித்துறை கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் பயன்பெற கூடிய பேருராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் சரிவு மற்றும் காற்று வீசும் போது மின்சாரம் இல்லாத காரணத்தால் பத்திற்கு மேற்பட்ட நாட்கள் குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகிறார்கள்.எனவே மேற்படி குடிநீர் திட்டத்தை மின்சாரம் இல்லாத நேரத்தில் இயக்கவதற்கு வசதியாக தேவையான இடங்களில் ஜெனரேட்டர் வசதி செய்து பொதுமக்களுக்கு குடிநீர் நிரந்தரமாக தட்டுபாடின்றி கிடைக்க கேட்டல்.
8. குமரி மாவட்டத்தில் தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலை அரசு செலவில் அமைத்து குமரி மாவட்ட கயிறு உற்பத்தியாளர்கள்(தென்னை நார் உற்பத்தியாளர்கள்)பயன்பெற வேண்டி தீர்மானம்.
9. NP சானலில் புதிதாக காங்கிரீட் தளம் அமைத்து(தோவாளை சானலைப் போல்)மதகு செப்பனிட்டு கடைவரம்பு விவசாயிகள் பயன்பெற தீர்மானம்.

M.S. [signature]
தலைவர்,
கன்னியாகுமரி மாவட்ட திட்டக்குழு,
நாகர்கோவில்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்